உ

குருபரன் றுணை.

திருச்செந்திலந்தாதி.

இந்நூல்

சம்புலிங்கபுரம்

வீரராகவக் கவிராஜரவர்கள் புத்திரர்

திருவண்ணாதக்கவிராஜரவர்களால்

இயற்றி

எட்டயபுரஞ் சமஸ்தானம் நவிற்பட்டி

நமசிவாயம்பிள்ளை யவர்கள் குமாரர்

ஷை சமஸ்தானம் கௌனகிரி டிவிஷன்பேஷ்க்கார்

சனம் ந. முத்துசுவாமிபிள்ளையவர்களால்

சைவபிரகா[illegible]சியந்திரசாலையில

பதிப்பிக்கப்பெற்றன.

அங்கிரஸ-௵ சித்திரை-௴

இதன் விலை அணா 1

உ

குமரன் துணை.



திருச்செந்திலந்தாதி.

காப்பு.

திண்டார்புகழ்திருச்செந்திலந்தாதிச்செழுந்தொடையல்
விண்பாலமரர் சிறைமீட்டவேந்தவன் மெய்யடி [illegible]
நண்பாயியற்றிப்புனைந்திடத்தினாளும்பணிகுதிட்டி [illegible]
கண்பார்த்தருள்தரும் கற்பகம்போலைங்கரக்களிறே.

சீரார்செயந்திப்பதிமேவிவாழுஞ் செழுங்கடப்பந்
தாரார்புயன்றிருக்கைவேலவன்றிகழ்சண்முகன்றன்
பேராயிரத்தெட்டுருவோதியென்றும் பிறங்கடியார்
சாரார்பிறவியிற்சாகாரெனமறை சாற்றிடுமே (1)

சாற்றுமந்தாதிதனைக்கொண்டு பிரானைத்தாரணியி
லேற்றமுண்டாகச்சிறைதவிர்த்தாண்டதையெண்ணியுன்றன்
பாற்றினஞ்சிந்தையைவைத்தேனெனக்கருள்பாலியட
லேற்றினையூர்பரன்பாலா செயந்திக்கிறையவனே (2)
இறையவனுந் தபசேகம்பகர்ந்தனையெண்குநவாய்
மறையவனைச்சிறைநீவைத்துவிட்டனைவானவரைச்
சிறைதவிர்த்திட்டனைநின்செயல்பாவர்தெளியகிற்பார்
நிறைதவர்போற்றிடச்செந்தூரில்மேவியநின்மலனே (3)
மலமொன்றினையுங்கடந்திட்டயோகியர்வானவர்கள்
தலமொன்றிலுந்தமைக்காத்திடுந்தேவனைத்தாமறியார்
நலமொன்றியதிருச்செந்தூரில்மேவியநாயகமாம்
வலமொன்றியவயிற்கையானையல்லாதுவாழ்த்துதற்கே (4)
தற்கிணைதானுலகில்லாதவேல்கொடுதானவரைக்
கற்கிணையானபுயங்கொய்தவாகைபகாரயத்தைப்
பொற்கிணையாமெனல்போலாஞ்செயந்திபுரத்துறையும்
நிற்கிணைதேவரில்யாவரையெனும் நிகழ்த்துவதே (5)
நிகழ்வதெல்லாமுன்றிருச்செயலாமென்று நித்தமுன்சீர்
புகழ்வதுமுன்றிருத்தாள்போற்றி[illegible]சனைசெய்வதுமுள்
மகிழ்வதுமன்னவடியார்குழாத்தொடுமவைகவருள்
[illegible]கழ்வதெனின்றில்லாத்திருச்செந்திலமேவியவண்குணனே
[illegible]முங்குறியுங்கடந்திட்டநின்னருள்கொண்டடியார்
[illegible]ங்குங்குறிகின்றயாக்கையைநீத்தனர்பல்
[illegible]மிறமுந்திகழ்பூங்கடம்பணிவானவயிக்
[illegible]மன்றுயரநீயருள்வாய்செந்தில்காப்பவனே (7)

காப்பதுநின் கடனல்லாதுமற்றிலைக்கற்பகத்தின்
பூப்புனைகின்றசுரர்திபனைமுதற்புங்கவர்நின்
காப்பணிந்தாறக்கரத்தையுஞ்சென்மங்கடப்பதற்கு
நாப்படப்பண்ணுவமொன்றுஞ்செந்திற்குநாயகனே (8)

நாயனம்பாலுடன்வைத்தாலுமெச்சிலைநாடியினும்
போயலைகின்றதைநேராகச்செந்தியிற்போற்றுதற்கு
நீயிருந்தம்பலதேவனைநாடிநிதம்பணிந்தேன்
றூயனையாயதைநீபொறுத்தாண்டருள்ஷண்முகனே (9)

ஷண்முகநாதன்றிருத்தாள்பணிந்துதனிப்புகழ்ப்
பண்முகமாகத்துதியாதவர்க்குமுன்பார்ப்பதற்குக்
கண்முகமீதிலிருந்தாலுமென்னகவின்பெறுமவெம்
புண்முகமீதுற்றதுவாஞ்செயந்தியைப்போற்றுமினே (10)

போற்றப்படும்பொருள்யாவைபுவிபூமியிற்பொன்றிடுபவை
தோற்றப்படுமுலகத்தியல்பாமிதுதோற்றியபின்
மாற்றப்படாதுகெடாதெங்குமுள்ளதுவாகுலகி
லேற்றப்படும்பொருள்செந்தூரில்வாழ்பொருளொன்றுமினே

மின்னேரிடைமடவார்கணாருமவிரும்பிமினிர்
பெண்ணேமரகதமே[illegible]ச் சொல்லிப்புகழ்ந்திடுமீர்
முன்னேவருஞ்சுகம்பின்னே துயரெனமுன்னிவிட்டுப்
பின்னுளிலுஞ்சுகமெய்திடச்செந்திலைப்பாடுமினே (12)

பாடுவதுன்புகழல்லாதுவேறிலைப்பற்றைவிட்டே
நாடுவதுன்னருளல்லாதுவேறிலைநான்முடியிற்
சூடுவதுன்திருவல்லாதுவேறிலைத்தாளையென்று
மிடுறமுன்னெழுந்தாள்வாய்செயந்தியில்வாழ்பவனே (13)

விற்பனமாகத் திருச்செந்தில்மேவியவித்தகரிற்
கற்பகநாட்டிற்புகுந்தவராங்கதைக்கண்டிலைந்து
அற்பமெனப்புங்கவருக்குரைத்தவரோடும்வந்து
பொற்புறவாழ்ந்திடில்யாரோவிதின்புகழ்கூறுவரோ (14)

கூறுமொழிக்குப்பயனுரையாதுளங்கூசிநின்ற
நாறுமலர்த்தவிசோனைச்சிறையிட்டநாளுலகம்
வீறுபெறும்படியாவையுந்தந்தநின்மேன்மையினைத்
தேறுந்திறமுடையாரெவர்செந்தியிற்றேசிகனே (15)

தேசிகனாகத்திருச்செந்தில்மேவியசிற்பரனை
வாசிகங்காயிகமானதமென்னும்வகைகளினு
லேசிறிதேத்திவணங்கித்தியானித்திடாமனமன்
பாசத்திழுக்கவிழுந்தழிவார்கெடுபாதகரே (16)

பாதகஞ்செய்யாதறமேபுரிந்துன்பதாம்புயத்தின்
மீதகம்வைத்துத்தினந்துதித்தேத்திடுமெய்த்தவமே
சாதகமெய்தாதிருத்தற்கருமருந்தாய்த்தமியேன்
பேதகமின்றித்திருச்செந்திலாய்கொளப்பேணுவையே (17)

பேணும்பொருளுனையல்லாதிலைப்பிரபஞ்சமிசை
காணும்பொருள்கெடும்நீயழியாயுனைக்கண்டுகொண்டேன்
சேணின்றமரர்கள்பூமாரிபெய்யச்செயந்தியினில்
ஆணிக்கனகமணிபோற்பிறப்பையறுப்பதற்கே (18)

அறுமீன்றராமுலையுண்டவன்பத்தரையாதரிப்போன்
பிறைநேர்நுதல்வள்ளிதெய்வானைநாயகன்பேதமறக்
குறுமாதவன்றெழமுன்ஞானமீந்தவன்குன்றெறிந்தோன்
மறுவேவகிடவெனையாட்கொண்டுசெந்தினில்வாழ்பவனே (19)

பவனனனல்புனலாகாயம்பூமிபருதிமதி
நவனியமானனெனுமிருநான்மயமானவனற்
சிவனயன்மால்வினைதானேபுரிருவன்றேவர்தொழ
வுவமையொன்றில்லாத்திருச்செந்தின்மேவியவுத்தமனே (20)

உத்தமனைத்திருச்செந்தூரில்வாழுமொருவனைச்
சித்தைத்தவிர்க்குந்தனிமருந்தாகியஷண்முகனை
யத்தநற்கநாளுபதேசங்களிக்கவளித்தவனைச்
சித்தத்திருத்துமின்பூவிர்நினைந்தவைசித்திக்கவே (21)

சித்திக்குமேபொருளின்பமெய்ப்புண்ணியஞ்சிரகமும்
தித்திக்குமென்கரும்பேயெனத்தேவருஞ்சென்றுதொழ
வெத்திக்கும்போற்றுந்திருச்செந்திலின்கணல்லின்பவள்ளி
யத்திகுமரியுடன்வாழ்குமாரனடியவர்க்கே (22)

அடியார்க்கருள்திருமால்நிறம்போலுமரும்புயல்காள்
கொடியார்குலக்கட்டறுத்திட்டவேலனைக்கூட்டுமின்றேற்
கடியார்செழுங்கடப்பந்தாரைவாங்கிக்கடிதளிமின்
அடியேனுமைப்பணிகின்றேன்படுமென்றுயரறைந்தே (23)

அறைவேனெவர்க்கினியென்செய்குவேனெனையாதரிப்பாய்
குறைவேதிருக்கினுநீ[illegible]ாறுத்தேதறுங்கொன்றைதிகழ்
பிறைவேணியன்றரும்பிள்ளாய்விநாயகன்பின்னுதித்த
இறையேசெயந்திப்பதிமேவிவாழ்கின்றவென்குருவே (24)

குருகார்தடஞ்சுனைசூழுஞ்செயந்திக்குகாவரியின்
மருகாகடம்பணிதோளாயறுமுகவானவாநன்
முருகாதிருக்கரவேலாவெனத்தினமுன்னியுவந்
துருகாதிருந்தவென்னெஞ்சியான்செய்தவழவலியே

ஊழிற்பெருவலியாவுள்வென் றுரைத்தார்குறளிற்
சூழிற்செயந்திப்பதியிற்குமரன்சுடர்த்தளிமுன்
ஆழிப்புனற்கயற்றீர்த்த * மெண்மூன் றமுண்டேயதனில்
வீழ்கிற்பிறப்பறுமுத்தியுண்டாஞ்சென் றுமூழ்குமினே (26)
செந்தினைமாவினைத்தேனொடுவள்ளிதினைப்புனத்திற்
றந்திடவுண்டவனேநின்றிருவடித்தாமரையை
வந்தனைசெய்திடுமடியேற்கருள்தரவந்திடுவாய்
செந்திலில்வாழுங்குமாரவறுமுகசிற்பரனே (27)
பரனேசிவனுக்குபதேசஞ்செய்தபரமகுரு
பரனேயறுமுகதேவாவசுரபயங்கரவெண்
கரனேமுதலெவருந்தாழயிலவகாத்தருள்தற்
பரனேசெயந்திப்பதிமேவிவாழும்பரஞ்சுடரே (28)
சுடர்விடும்பொன்முடித்தேவரைக்கொல்லத்தொடர்ந்தபெருங்
கடல்விடமுண்டசிவன்புதல்வாவெனைக்காத்தருள்கை
விடிலுன்குலப்பெருந்தன்மைக்குமாசுறுமெல்லியபல்
கொடிதிகழ்மாடச்செயந்திலில்மேவுங்குணலயனே (29)
ஆலயந்தாசருளமாகவென் றுமமர்ந்திருக்கும்
மாலையமானெனுங்கர்த்தாகுருபரவானவங்க
வேலையனுள்மலைசூர்கடல்மீதினில்விட்டுநினைப்
போலையயார்செயஞ்செய்தார்செயந்திற்புண்ணியனே (30)

---

* வதநாரம்பம், தெய்வயானை, லக்ஷுமி, சித்தர், திக்குப்பாலகர், காயத்திரி, சாவித்திரி, சரஸ்பதி, அயிராவதம், வயிரவன், வள்ளியம்மை, துர்க்கை, ஞானம், சத்தியம், தர்மம், முனிவர், தேவர், பாவநாசம், கந்தபுட்கரணி, சேது, கங்கை, கந்தமாதனம், மாதுர், பிதுர் என்னும் திருநாமங்களையுடைய தீர்த்தங்கள் ௨௪ உள்ளன.

புண்மிசைவேலுற்றதுபோலயானுயிர்பொன்றும்மை
மண்மிசைநோயுற்றழுந்திடவோவெனைவந்தருள்வாய்
விண்மிசைவாணரும்பூசுரர்யாவரும்வேண்டிநிதங்
கண்மிசையொத்தச்செயந்தியில்வாழ்செழுங்கற்பகமே (31)

கற்பகம்நீங்காதுழைமகள்செந்தினைகாத்திடுநாள்
பொற்புளம்நீங்காதுருப்பலவாயவண்போய்மணந்தாய்
கற்பகநாட்டுக்கிறையானவன்றருகாதலிதான்
அற்புகல்துன்படையாமோசெயந்தியிலாண்டவனே (32)

ஆண்டவவென்றுனைப்போற்றுதிருக்குமறிவிலர்கள்
வேண்டியகாரியமெவ்வாறடைவர்விண்ணோர்கடொழத்
தாண்டவஞ்செய்தவன்பாலாவெனக்கருள்தந்திடுனைத்
தீண்டியென்சிந்தையில்வைத்தேன்செயந்தியிற்றேசிகனே 33

தேசிற்சிறந்திடும்பூமாதினெற்றித்திலகமெனப்
பேசப்பிறங்கிடுஞ்செந்தூரில்மேவியெம்பெம்மானைநல்
வாசக்கடம்பணிதோளானைவாழ்த்துமின்னவன்னயன்னைப்
பாசத்தைநீங்கியுலகீர்பரகதிசேருதற்கே (34)

சேருந்திருவொடுகல்வியும்ஞானமுந்தேசும்வரும்
தீருஞ்சிறுமையுந்துன்பமுஞ்சிக்கலுந்தேவர்களும்
சாருங்குமாரன்றிருக்கையில்வேலுடைச்சண்முகன்றன்
பேருங்குணமும்புகழும்பிறங்கிடுஞ்செந்திலையே (35)

இலையார்ந்திடுந்திருநீறுடன்சந்தனமெப்பொழுதும்
நலமாய்த்தரத்தகுங்கோயிலுந்தீமையைநந்திடச்செய்
தலையாகியசிந்துவின்றீர்த்தமுஞ்சண்முகப்பரனும்
நிலையாஞ்செயந்தியினல்லாதுகாணிலிகம்[illegible]னை (36)

மின்னெனத்தோன்றிக்கெடுவாழ்வைநம்பியிம்மேதினியோர்
தன்னியல்பொன்றையுமோராமலென்றுந்தருக்குறுவார்
பன்னிருகையுடையான்சீர்செயந்திப்பதியினிற்போய்ப்
பன்னித்துதியார்நமன்வரும்போதென்னபண்ணுவரே (37)

பண்ணிற்சிறந்தமொழியாளுமற்றுளபாக்கியமும்
மண்ணிற்சிறந்ததனதடியார்களுக்கெப்பொழுதும்
நண்ணிற்சிறந்தசெயந்தியிற்றானெனவந்தமர்ந்தான்
விண்ணிற்சிறந்திடுந்தேவர்குழாஞ்சிறைமீட்டவனே (38)

மீட்டும்பிறந்துழலாமற்பரகதிமேவும்வழி
காட்டுஞ்செயந்திப்பதிமேவியன்பர்களித்துரைக்கும்
பாட்டுஞ்சுரும்பமர்பூங்கடம்பாரமும்பண்புபெறச்
சூட்டும்புயத்தெங்குமாரன்றுகளறுமாறெழுத்தே (39)

எழுத்தறியாதவருங்கூறுமுன்னருளெய்தியபின்
விழுத்தகுநூல்களைச்செய்தாரனந்தம்விரிந்தமறை
பழுத்தகுநற்பெருமானேயெனக்கருள்பாலியெலாம்
வழுத்தும்படிக்குச்செயந்தியில்நாளும்வசிப்பவனே (40)

வசியந்தருமெழுத்தாறையுமோதியுன்மாணடிகள்
நிசியும்பகலுந்தொழுதேத்திடிற்றொடர்நீள்வினையும்
நசியும்நினைத்தவையாவுங்கைகூடிடும்நாண்மலர்த்தேன்
கசியக்கயலுறுஞ்செந்தூரில்வாழ்பெருங்கற்பகமே (41)

கற்றலுமென்னினைப்பணியார்செழுங்கற்பகத்தைநப்
பெற்றலுமென்னபிரயோசனம்பெறுவார்கள்சிறை
நற்றபதர்களுந்தேவருமேத்திநனிவணங்க
வற்றவலைகட்டற்செந்தூரில்வாழுமறைப்பொருளே (42)

மறைதேடியின்னுமுனைக்காணவின்றிவருந்துமெனில்
முறையேயுனைக்கண்டடியேன்பழிச்சவெவ்வாறுமொழி
குறைவேதுமின்றியடியாருளத்திற்குடியிருக்கும்
நிறைவேசெயந்திப்பதிமேவிவாழ்கின்றநின்மலனே (43)

நின்மலமாகவுயிர்தோறும்நின்றுனைந்தவனைத்
தன்மயமாகத்தனிநீபுரிகுதல்தான்பெரிதோ
பொன்மலைகாகந்தனைச்சேர்ந்திடக்கணப்போதினிலே
தன்மயமாக்கியதாலுற்செயந்தியிற்ஷண்முகனே (44)

முகமாறிரண்டுடன்செந்தூரில்வந்துமுளைத்தடியார்
அகமாகிடத்திருநீறள்ளியல்லிடுஞ்சுந்தரமாங்
குகவேடிருக்கழலன்போடுநெஞ்சினிற்கொள்கிலரேல்
மகம்யாதியற்றினும்வாழார்கள்மண்ணினும்வானத்துமே (45)

வானந்தரணியிசைவாழுந்தேவருமாந்தர்களுந்
தானந்தவமுதல்யாவுஞ்நினைத்தொழுந்தன்மையெவ்வோ
ஆனந்தமாகநினைப்பணிவாரிதற்கையமுண்டோ
கானந்தமருங்கடற்செந்தில்வாழ்கின்றமாதவனே (46)

மாதவர்சிந்தைதனிற்றாயதாகவளங்குலவி
யாதவன்சந்திரன்றோய்மாடகூடமமர்ந்துநறும்
போதலர்வாவியுஞ்சோலையுஞ்சூழப்பொலிந்துகடற்
சீதளவாடைதினஞ்சேர்செயந்தியெஞ்சேயிடமே (47)

இடம்பொருளேவன்மற்றெல்லாமடைகுவரெங்கணுமிங்
குடம்பொடுஞ்செல்லுவர்தேவர்களேத்தவுந்திருமார்
கடம்பொழிபானைமுகத்தாற்கிளையவன்கண்ணருளைத்
திடம்பெறச்செந்திலிற்போய்ச்சிறிதாற்றிடப்பெற்றவரே (48

பெற்றபிதாவுக்குபதேசஞ்செய்துபெருங்குருப்பே
ருற்றனைநீபொதிகாசலமாமுனிக்கோதினைபின்
நற்றவனொத்தனைபேர்ககோவுனாத்தனைநான்றெளிய
வெற்றறக்கெனக்கருள்செய்வாய்செயந்தியிலெம்பரனே (49

எம்பிரான்ஷண்முகன்றெய்வானைவள்ளியெனுமிருவர்
தம்பிரானென்றுதழுவும்புயாசலன்சந்தவெற்பன்
நம்புவார்க்கின்னருள்செய்வோன்செயந்தியில்நாயகன்காண்
வம்பமர்நீபத்தொடைதந்துமேவியவானவனே (50)

வானவராகயிருந்தாலுமென்னமுன்மாற்றலராந்
தானவராலுற்றபாட்டுக்களவிலைத்தாரணியில்
மானவராகயிருந்தாலுமென்னநின்மாணடிகள்
தானகலாதுறச்செய்வாய்செயந்தியித்தயாநிதியே (51)

தயவாகியநிதிசெந்தியிற்சார்குகன்றந்தனனோர்
பயமானதில்லையமனுக்கெஞ்ஞான்றும்பரிந்துவரும்
நயமாகியவினையாவையுந்தீங்கறும்ஞாட்பிணிலுஞ்
சயமானதுவரும்நெஞ்சேஎமக்கொருதாழ்வில்லையே (52)

தாழ்வுமுயர்வுஞ்சரியெனவெண்ணிநற்றுபதர்கள்
வாழ்வைக்கருதாதுனதடித்தாமரைவந்துபணிந்
தூழைக்கடந்தனர்யான்செயுமாறெதிங்குற்றெனையாள்
தாழையில்வாளைகள்தாவுஞ்செயந்திற்சற்குருவே (53)

சற்குருதந்தையுந்தாயுங்கடவுளுந்தாரணியில்
எற்குனையன்றியில்வேறில்லையேவந்தெனக்கருள்வாய்
பொற்குடமல்குஞ்சிகரியங்கோவிலும்பூம்பொழிலும்
நெற்குவிமாடமுமல்குஞ்செயந்தியில்நின்றவனே (54)

நின்றான்செயந்திமுதலாந்தலங்களில்நேயமுடன்
சென்றானுழைதருமாதினைச்சேரத்தினைப்புனத்தில்
முன்றான்புரிவினையாலேவருமிருமுப்பகையும்
வென்றானருளத்திலிருந்தான்றிருக்கரவேலவனே (55)

வேலைத்திருக்கரத்தேந்தியநாயகன்மெய்யடியார்
ஆலைக்கரும்பிணையாகமையாதுவந்தாண்டுகொளக்
காலைச்செழுங்கதிர்போல்மயில்மேல்வருங்கர்த்தனுறும்
மாலைத்தவிர்ப்பான்செயந்தியைச்சேர்குலமாமயிலே (56)

குலந்தவம்மானங்குடிபுகழ்கல்விகொடையறிவு
வலங்கெடுமேமிடிவந்துறிலிங்கெனைவந்தணுகா
துலம்பொருதோளாயருள்புரிவாயுனையுற்றடைந்தேன்
நலந்திகழ்செந்தியின்வாழ்வேசிவன்றருநாயகமே (57)

தருப்புயல்நேர்செழுங்கையாய்குபேரசம்பன்னகெடா
வுருப்பொலிவாமதவேளையெனத்தினமொன்றுகொடாக்
கருத்துடையார்தமைப்பாடிநொந்தேன்கடைக்கண்ணருள்
தருப்புடைசூழுஞ்செயந்தியின்மேவுஞ்சடாக்ஷரனே [செய்

சடாட்சரஷண்முகசெந்தியில்வாழுந்தயாபரநின்
கடாட்சமுண்டாகிடப்பெறாரொருகுறைகண்டதிலை
விடாச்சுரம்பாண்டியர்போற்றிடப்போக்கிமுன்வீணமணும்
அடாச்செயலாரைக்கழுவேறிடச்செய்ததற்புதமே (59)

அற்புதசெந்தியில்வாழ்கின்றதேவவறலிலெழும்
புற்புதம்போலழியுஞ்சிறுவாழ்வினைப்போதயன்றன்
கற்பமுந்தாழுறல்போலேநினைந்துகளித்துனது
பொற்பதம்போற்றிப்பணியாதுமானிடர்போவதெனோ (60)

போக்கும்வரத்துமுலகினுண்டாமிதுபோகவுடன்
நீக்கும்பெருமானடியாருளத்தில்நினைந்தவைபுண்
டாக்கும்பெருமான்செயந்தியில்வாழ்குகனுக்குங்கண்டீர்
காக்கும்படிக்குந்துசங்கட்டிநிற்குமிக்காரணனே (61)

காரணனெல்லாவுயிர்க்குங்கடல்விடமுண்டருளும்
பூரணன்பாலன்புராதனன்போகிபிற்கண்வளரும்
நாரணதேவர்க்குரித்தாமருகனென்றுளும்வந்து
ஆரணன்போற்றச்செயந்தியில்மேவியவாண்டவனே (62)

ஆண்டுளனீண்டுளனென்றதுவன்பாகத்தளியிற்
பூண்டிகழ்வள்ளிதெய்வானையினோடும்பொருந்தியவர்
வேண்டியவின்பங்கொடுத்தருள்வான்மிகுமேன்மையுடன்
பாண்செயும்வண்டடர்சோலைச்செயந்திபிற்பண்ணவனே (63)

பண்ணருணகிரிநாதர்செய்தபனுவல்புனை
தண்ணார்கமலமலர்த்தாளிலிச்சிறுதாழ்பனுவல்
கண்ணுதரத்துடனேபூண்டெனக்கருணல்கிமனம
புண்ணுகிடாதருள்வாயோசெயந்திப்புராதனனே (64)

புராதனமாமறைதேடிடுங்கந்தப்புனிதனெழு
தராதலமேத்தத்திருச்செந்தில்மாநகர்தன்னில்நிதம்
பராவடியார்துயர்தீரும்படிக்கிதம்பண்ணிடவும்
நிராசனர்வாழத்தகுவரைக்காயவும்நின்றதுவே (65)

நிற்பதுமின்னதுவில்லாததின்னதுமென்றுநிகழ்
சொற்பனந்தன்னிலுங்கண்டறியேன்சுயமாஞ்செயந்திப்
பொற்பதிநிற்பவன்றன்னருட்செல்வமொன்றேபுவியில்
நிற்பதுமற்றதுநில்லாதுநிற்பதைவேண்டுமினே (66)

மின்னுமணிமுடிவேந்தரும்யாரும்வியனுலகிற்
றன்னுயிரீந்தேயொழிந்தனனென்னையித்தாரணியில்
இன்னும்பிறக்கும்படிபுரியாதுன்னிணையடியில்
மன்னும்படிக்கருள்செய்வாய்செயந்தியில்வானவனே (67)
வானிறைபொன்முடியீதேவளையினைவிட்டெறிந்தான்
றேனிறைமேருவைச்செண்டாலடித்துச்செருக்கொழித்தா
மீனிறைவேலையைவற்றிடக்கூரயில்விட்டெறிந்தான் ன்)
ஞானமதுரைக்கிறையாய்ச்செயந்தியில்நாயகனே (68)
செயந்தரும்வேலினைச்சேந்தனைச்சேவற்கொடியினைப்பொன்
மயஞ்செறிமஞ்ஞையைவள்ளிதெய்வானையைமாண்படையை
நயந்தருஞ்சிந்துவைச்செந்திலைக்கோவிலைநற்றுறவைப்
பயன்பெறப்பாடுமின்பாடுமின்னீள்வினைபாறுதற்கே (69)
பாறுங்கொடியுடன்சேனமும்வான்மிசைப்பந்தரிடச்
சீறுந்தகுவரைச்சேனையினோடுஞ்செருக்களத்தி
ராறம்புயத்துடைச்செந்திலன்வேல்கொண்டறுத்திலனேற்
கூறுஞ்சுரர்சுகமாயெங்குவாழ்ந்துகுலாவுவதே (70)
குலப்பகையாவையும்வென்றிடலாங்குடியைக்கெடுக்கும்
புலப்பகையைந்தையும்வெல்லரிதேயைம்புலப்பகையை
வெலத்தகுமாயுதம்நின்னாறெழுத்துமவிளங்கருளுஞ்
சொலத்தகும்நீறுமிவைதாசெயந்தியிற்சுந்தரனே (71)
சுந்தரவேலினைச்செந்திலில்வாழுஞ்சகுணனையே
சந்ததங்காணவிழிசெவிகேட்டிடத்தாளிணைகள்
வந்தனைசெய்யச்சிரம்வாய்வழுத்திடவாய்த்தவர்தா
மிந்தக்குலத்திலிருந்தாலும்யாருமிறைஞ்சுவரே (72)

இறைஞ்சடியார்க்குறும்புன்கணைநீக்கி யின்பமருள்
நறைஞ்சுவைத்தேனனையானைடபோற்பரம்நானறியேன்
அறஞ்செயும்பார்வதிமைந்தாவெனக்கருளன்புடன்பொற்
புறந்திருச்செந்திற்பதிமேவுமுத்தமபுண்ணியனே (73)

உத்தமமாம்வதனாறு பழுழ்கியுன்றாளிணைகள்
பத்திநிறைப்பணிந்தேத்தாதிருந்தயிப்பாவியையிங்
கெத்தனைகொண்டினியாள்வாயருந்தவமோதமறுஞ்
சித்தர்களைத்தச்செயந்தியில்வாழுஞ்செழுஞ்சுடரே (74)

செழுங்கதிர்மாமணிமாடத்திலெங்குஞ்செறியிருளை
விழுங்கித்திகழ்திருச்செந்தூரில்மேவிவிளங்குமொ நள்
புழுங்குவெஞ்சிந்தையிற்றனேமுளைத்துப்பொருமகந்தைக்
கிழங்கைப்பிடுங்கியெறிதாசர்பெற்றிடக்கிட்டிடுமே (75)

கிட்டற்கரிதாப்பொருள்யாவும்வந்துறுங்கீர்த்திவரும்
முட்டுப்படாதுயாமோக்ஷமுங்கிட்டிடுமோதமிழ்த்
துட்டத்தகுவர்குலமாய்த்தவேலனைச்சுந்தரனை
மட்டவிழ்நீபத்தொடையனைச்செந்திலைவாழ்த்தினர்க்கே ( )

வாழ்த்தாதவாயினைக்காணாதகண்ணினைவாழ்வுபெறத்
தாழ்த்தாதசென்னியைக்கேளாதகாதினைத்தாமரிந்து
வீழ்த்தாதவன்பர்கள்தானல்லரோசெந்திலிமேவியெனை
யாழ்த்தாதழறிடைகாத்தாளறுமுகதேவனையே (77)

தேவாதிதேவனைச்செந்தூரிலென்றுந்திகழ்மணியை
மூவாதநாதனையாவருமேத்துமுதற்பொருளைப்
பாவாணர்போற்றிடச்சங்கத்தின்மேவியபாவலனை
நாவாற்றுதிக்கிநெஞ்சேயுறுபவம்நீந்திடற்கே (78)

நந்தாதஞானவிளக்கேய நந்தவர்காடித்தொழும்
எந்தாயராம்வள்ளிதெய்வானையோடிமிசைந்தெழுந்து
வந்தாதரிக்கச்சமையமிதாமின்றுவந்தருள்வாய்
நந்தார்கடற்கரைச்செந்தூரில்வாழுமென்னாயகமே (79)

என்செயலாலொன்றுறுவ துண்டோவதிலில்லையெலா
முன்செயலாமெனையாண்டுகொள்வாய்தனியோரெழுத்தைப்
பொன்செயுங்கொன்றைச்சடையாருவந்திடப்போந்துரைத்
என்சொலநின்புகழையாசெயந்திநகரிறையவனே [தாய்

செந்தூவர்வாயுமைமாதன்றிருநுதற்கண்ணிலுதித்
தந்தழல்மாருதமேந்திச்சுரநதியாற்றிலுறுஞ்
சந்தச்சரவணபொய்கையில்விட்டிடத்தான்வளர்ந்து
செந்தியில்வாழ்ஜகநாதாயெனக்கருள்செய்குவையே (81)

செய்யிலனங்கண்டுயில்கின்றசெந்திற்பதியுறையும்
ஐயன்கருணைக்களவுமுண்டோயிதையாரறைவார்
மெய்யன்பருள்ளத்திருணீக்கியென்றும்விளங்கடியா
ருய்யும்படிக்கருள்வான்புதமேத்துதலுத்தமமே (82)

உத்தமமென்பதென்னெஞ்சேபசியறவுண்டுடுத்து
நித்திரைசெய்வதிங்கென்றேநினைத்ததைநீக்கிவரும்
பத்தர்கடுன்பறச்செய்தேயதந்தமவந்துதித்த
நத்தமர்செந்திற்பதியானைநாடுவதென்றறியே (83)

அறிவொன்றிலாய்பித்தராகினுஞ்சேயினையாதரவாய்
நெறிநின்றதந்தையர்காப்பதல்லாற்கைநெகிழவிடார்
அறைகின்றவேதமுந்தவேயெனையுமவ்வாறருள்வாய்
நறைதுன்றுநீபந்தொடையாய்செயந்தியிறையவனே (84)

செக்கழுறைப்பணினின் றும்வணக்குகைசேர்ந்திருந்தும்
இந்தப்புவியைவலம்வந்துகானிடஞ்சென் றுமறல்
கந்தஞ்செறிகனிமூலங்களுண்டுங்கதிக்கலைவீர்
செந்திலைப்போய்ப்பணியுங்காண்டிருக்குகன்பேருரைத்தே()
தேய்கின்றதென் றுநஞ்சிந்தைநொந்தேதினம்பாலருந்தி
மாய்கின்றயாக்கையைப்பேணநிற்பீர்கொடுமாமறலி
காய்கின்றபோதிலென்செய்வீர்புரக்கக்கதித்தலைகள்
பாய்கின்றசெந்திற்பதியானையன்பொடுபற் றுமினே (86)

பற்றறுத்துன்பதமேகதியாகப்பணிந்துருகும்
நற்றவரின்குழாடாதுபொன்புவிகாரியர்தம்
அற்புற்றிதுவரைவாழ்நாளகழித்தவறிவிலனை
யெற்றைக்குநீயுவந்தாள்வாய்செயந்திக்கிறையவனே (87)

திக்கறியாதலைமாறுமபியோலுந்திகைத்திடுமென்
பக்கமிருந்துபதேசம்பகர்ந்துநற்பண்பருள்செய்
நக்கன்பிரமன்குடமுனிவேண்டநின்றிடுபோ
தக்கலையாரிடங்கற்றாய்செயந்தியிலாண்டவனே (88)

ஆண்டவனேற்றுவசத்தான்செயந்திக்கதிபனயில்
பூண்டகரத்தன்மயில்வாகனத்தன்பொருந்தடியார்
வேண்டியவின்பமருள்வோனறுமுகன்விண்ணவர்கள்
தீண்டற்கரியானடியேனுளத்தணிசேர்த்தனனே (89)

சேரும்பிரியமனைமைந்தருஞ்சுற்றமுஞ்சேட்டோரும்
பேருந்துணைவருந்தந்தையுந்தாயும்பிரிந்திடுவார்
யாருந்துணைவரமாட்டாரெனக்கருள்புரிவாய்-
பாருந்திருக்கண்டக்கண்ணுறைச்செயந்திப்பதிமன்னவனே (90)

பண்ணையில்மானும்விழியாளைக்கூடிப்பரிந்துமிகப்
பண்ணையன்பாகத்தரப்பெறுவீரொழிற்பொய்கையினிற்
பண்ணையிற்சங்குதவழ்மரசெயந்திப்பதியுறையும்
புண்ணியன்றாளைக்கருதீர்பவவினைபோக்குதற்கே (91)

வினையால்வருந்தித்திரிந்ததுபோதுமிம்மேதினியில்
அனைபாலருந்தப்பிறக்கவொட்டாதுவந்தாதரிப்பாய்
சினையால்வருந்திக்கடற்சங்கமேங்குஞ்செயந்தியினும்
நினைவாருளத்துங்குடிகொண்டஷண்முகநித்தியனே (92)

நித்தியனாகச்செயந்தியில்வாழுயர்நின்மலனைச்
சத்தியினுதரப்பிள்ளையைக்கந்தனைத்தாடுதியா
தெத்தனைதப்பிதஞ்செய்தீரெனச்சமன்றூதுவர்கள்
பத்தியிலார்தமைத்தண்டாலடிக்கப்படுவர்களே (93)

படுதுயர்நீயறியாதவன்போலபராமுகமாய்
நடுவன்வரும்வரைநீயிருந்தாற்சுகம்நண்ணுவனோ
கொடுவின்றெளிர்மயில்மீதேறிவந்துகுறைதவிர்வரங்
கடலொன்றியதிருச்செந்தூரில்வாழ்சிவகான்முளையே (94)

கான்முளைவந்துறப்பாவங்கணீங்கிக்கதிபொருந்த
வான்றருங்கங்கையிற்சேதுவின்மூழ்கமனந்துணிவீர்
கான்வரும்பூங்கடம்பாரன்செயந்தியிற்கார்கடலில்
நான்முகனுவதனுரமபமாடிடநண்ணுமினே (95)

[illegible]பார்முனம்பன்னிருதோளுமறுமுடியுஞ்
[illegible]வாமுகமும்பன்னிருநேத்திரமுந்தயங்கிட்டமால்
கள்வருமோரிருமாதரினோடுகளிமயின்மேல்
பண்மிசைதோன்றியருள்வான்செயந்தியில்வானவனே (96)

வான்பெறவேண்டிப்பரிமகநூறும்வருந்திமிகத்
தான்செயவேண்டுவதில்லைச்செயந்தியிற்சண்முகன்றன்
றேன்மலர்ப்பாதந்தொழுதோராறெழுத்துஞ்செபித்திடிலவ்
வானென்றுமோவதின்மேலாங்கதிகளும்வந்துறுமே (97)

வந்துக்கிரன்சுதைசிந்துவின்மூழ்கிவணங்கவுடன்
இந்துகவிணைமுகமானதுகந்துகத்தின்முகம்போய்ச்
செந்திற்பதியில்முகாரம்பதீர்த்தந்தினைத்தவருக்
கெந்தப்பவமுமில்லாதெனமாமறையேத்திடுமே (98)

எத்தடியார்க்குறுமின்னலைநீக்கிநல்லின்பமுறக்
காத்திடுமெங்கள்செயந்திப்பிரான்றிருக்கண்ணருளை
நாத்தழும்பேறப்புகழ்ந்தஞ்சலித்துநண்ணிபெறுவீர்
மாத்தருஞ்செல்வமுங்கல்வியுஞ்ஞானமும்வந்துறற்றே (99)

வந்தித்ததேவர்களெல்லாருநற்பெருவாழ்வடைந்தார்
நிந்தித்தசூர்கிளையெல்லாமொழிந்தனநிச்சயமாய
செந்திற்பதியுறைசெவ்வேளைவாழ்த்தித்தினந்தினமுஞ்
சிந்திக்கவேண்டுமென்னெஞ்சேயருட்பெருஞ்சீர்பெறவே ()

முற்றிற்று.

